

பாமாலை 98 - இதோ மரத்தில் சாக

1. இதோ, மரத்தில் சாக
உன் ஜீவன் உனக்காக
பலியாம், லோகமே;
வாதை அடி பொல்லாப்பை
சகிக்கும் மா நாதனை
கண்ணோக்குங்கள், மாந்தர்களே.

2 ஆர் உம்மைப் பட்சமான
கர்த்தா, இத்தன்மையான
வதைப்பாய் வாதித்தான்?
நீர் பாவம் செய்திலரே,
பொல்லாப்பை அறியீரே;
ஆர் இந்தக் கேடுண்டாக்கினான்?

3. ஆ! இதைச் செய்தேன் நானும்
என் அக்கிரமங்கள் தானும்,
கடற்கரை மணல்
அத்தன்மையாய்க் குவிந்த
என் பாதகங்கள் இந்த
வதைப்புக் காதிமூலங்கள்.

4. நீரோ என்மேல் உண்டான
அழுத்தும் பாரமான
சுமை சுமக்கிறீரே;
ஆசீர்வதிக்க நீரே
போய்ச் சாபமாகிறீரே;
நான் தப்ப நீர் படுகிறீர்.

5. கர்த்தாவே, நீர் பகைக்கும்
பொல்லாப்பை என்றென்றைக்கும்
வெறுத்தரோசிப்பேன்;
என் இச்சையை நாள்தோறும்
ஆகாத சிந்தையோடும்
நான் சிலுவையில் அறைவேன்.

6. ஆ, உமது ஜெபமும்
அவஸ்தையும் தவமும்
கண்ணீருங் கிலேசமும்,
நான் செத்தால் பரலோக
சந்தோஷத்துக்குப் போக
வழித் துணைக்குதவவும்.